**ஜனவரி – 13**

# TNPSC துளிகள்

- இலகு ரகப் போர் விமானமான தேஜாஸ் ஆனது போர்க் கப்பலான ஐ.என்.எஸ் விக்ரமாதித்யாவில் வெற்றிகரமாகத் தரையிறக்கப்பட்டது.
    - இது ஒரு கடற்படைக் கப்பலில் வலுக்கட்டாயமாகத் தரையிறக்கப்பட்ட முதலாவது இலகு ரகப் போர் விமானமாக உருவெடுத்துள்ளது.
- உலக எதிர்கால ஆற்றல் உச்சி மாநாடானது அபுதாபியில் நடைபெற்றது.
    - இந்த உச்சி மாநாட்டோடு, காலநிலை கண்டுபிடிப்புப் பரிமாற்றம் 2020 (Climate Innovations Exchange – CLIX) என்ற நிகழ்ச்சியும் நடத்தப் பட்டது.

# தேசியச் செய்திகள்

## இணையப் பயன்பாடு

- அரசியலமைப்பின் 19வது பிரிவின் கீழ் இணையத்தைப் பயன்படுத்துவது ஒரு அடிப்படை உரிமை என்று உச்ச நீதிமன்றமானது ஜனவரி 10 ஆம் தேதியன்று தீர்ப்பளித்தது.
- நீதித்துறை ஆய்வைக் கட்டுப்படுத்தவும் அல்லது நிறுத்தி வைக்கவும் கோரும் எந்தவொரு உத்தரவும் நீதித்துறை ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.
- இது நீதிபதி என்.வி.ரமணா தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு அளித்த தீர்ப்பாகும் .
- உலகின் எந்தவொரு ஜனநாயகத்திலும் ஏற்படுத்தப்பட்ட இணையப் பயன்பாட்டு முடக்கத்தை விட காஷ்மீரில் ஏற்படுத்தப்பட்ட இணையப் பயன்பாட்டு முடக்கமானது மிக அதிக நாட்கள் கொண்டதாகும்.
- இந்தியாவானது உலகளவில் இணையப் பயன்பாடுகளை முடக்கம் செய்யும் நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- இணையப் பயன்பாடுகள் முடக்கக் கண்காணிப்புக் கூற்றுப்படி, இந்தியாவில் 2019 ஆம் ஆண்டில் 106 முறைகளும், 2018 ஆம் ஆண்டில் 134 முறைகளும் இணையப் பயன்பாடுகள் முடக்கம் செய்யப் பட்டுள்ளன.

***பின்னணி***

- 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டம், 1973 ஆம் ஆண்டு இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் 1885 ஆம் ஆண்டு தந்திச் சட்டம் ஆகியவை இணையச் சேவைகளை நிறுத்தி வைக்கும் மூன்று சட்டங்களாகும்.
- ஆனால் 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர், இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 144வது பிரிவின் கீழ் இணையப் பயன்பாடுகள் முடக்கம் தொடர்பான உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டன.
- 2017 ஆம் ஆண்டில் இணையப் பயன்பாடுகளானது "ஒரு அடிப்படை மனித உரிமை" என்று அறிவித்த முதல் மாநிலமாக கேரளா உருவெடுத்துள்ளது.

## ரைய்சினா உரையாடல் - 5வது பதிப்பு

- இது 2016 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் புது தில்லியில் நடைபெறும் ஒரு

பன்னாட்டு மாநாடு ஆகும்.

- இந்த உரையாடலை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் அப்சர்வர் ரிசர்ச் பவுண்டேஷன் (Observer Research Foundation) ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.
- புவிசார் அரசியல் மற்றும் புவிசார் பொருளாதாரத்துடன் தொடர்புடைய இந்தியாவின் ஒரு முதன்மையான உலகளாவிய மாநாடு இதுவாகும்.
- இந்த மாநாட்டிற்கு இந்திய அரசு மற்றும் ராஷ்டிரபதி பவனின் இடமான "ரைய்சினா ஹில்ஸ்" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- ஷாங்க்ரி-லா உரையாடலின் பிரதியைப் போல இந்த உரையாடல் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இந்தச் சந்திப்பில் ரஷ்யா, ஈரான், மாலத்தீவு, மொராக்கோ, ஆஸ்திரேலியா, பூடான், டென்மார்க், செக் குடியரசு, உஸ்பெகிஸ்தான் மற்றும் எஸ்தோனியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கலந்து கொள்வார்கள்.
- 2020 ஆம் ஆண்டிற்கான கருப்பொருளானது "ஆல்பா நூற்றாண்டை நோக்கியப் பயணம்" என்பதாகும்.
- 2020 ஆம் ஆண்டுக்கான ரைய்சினா உரையாடலின் முக்கியப் பேச்சாளர் ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன் ஆவார்.

## கொல்கத்தா துறைமுக அறக்கட்டளையின் 150வது ஆண்டுவிழா

- சித்தரஞ்சன் இரயில் பெட்டித் தொழிற்சாலை, தாமோதர் பள்ளத்தாக்கு கழகம் மற்றும் இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலை ஆகியவற்றின் விரிவாக்கத்திற்கு இந்தியப் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.
- இந்நிகழ்வின் போது கொல்கத்தா துறைமுக அறக்கட்டளையானது "ஷியாமா பிரசாத் முகர்ஜி துறைமுகம்" என்று மறுபெயரிடப்பட்டது.
- அவர் பாரதிய ஜன சங்கத்தின் நிறுவனர் ஆவார்.
- சுந்தரவனக் காடுகள் பிராந்தியத்தில் 200 பழங்குடி சிறுமிகளுக்காக கௌசல் விகாஸ் கேந்திரா மற்றும் பிரிதிலதா சத்ரா ஆவாஸ் ஆகியத் திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- கௌசல் விகாஸ் கேந்திராவானது நாட்டில் உள்ள இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு மையங்கள் ஆகும்.
- அவை பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளன.

## சைபர் ஆஷ்வாஸ்ட்

- மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நாட்டின் "சைபர் ஆஷ்வாஸ்ட்" என்று அழைக்கப்படும் முதலாவது இணையவழிக் குற்றத் தடுப்புப் பிரிவை குஜராத்தில் உள்ள காந்தி நகரில் தொடங்கி வைத்தார்.
- ஆஷ்வாஸ்ட் உடன், காணொளி ஒருங்கிணைப்பு மற்றும் மாநில அளவிலான மேம்பட்ட பாதுகாப்புத் திட்டமான விஸ்வாஸ் என்னும் திட்டமும் தொடங்கப் பட்டுள்ளது.
- ஆஷ்வாஸ்ட் மற்றும் விஸ்வாஸுடன், நேத்ரங் என்ற திட்டமும் தொடங்கப் பட்டுள்ளது.
- சைபர் ஆஷ்வாஸ்ட் என்பது விஸ்வாஸ் மற்றும் நேத்ரங் உதவியுடன் இணையவழிக் குற்றங்களைத் தடுக்கச் செயல்படும் ஒரு பிரிவு ஆகும்.

# சர்வதேசச் செய்திகள்

## ஹார்முஸ் அமைதி முன்னெடுப்பு

- அண்மையில் டெஹ்ரானில் நடைபெற்ற ஹார்முஸ் அமைதி முன்னெடுப்பு நிகழ்ச்சியில் இந்தியா கலந்து கொண்டது.
- இந்த முன்னெடுப்பானது அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கிடையே நடைபெறும் பதட்டங்களுக்கு மத்தியில் உலகின் பரபரப்பான கப்பல் பாதைகளில் ஒன்றான ஹார்முஸ் ஜலசந்தியை அமைதிப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- இதில் ஈரானின் முன்னணி வர்த்தகப் பங்காளர் நாடுகளான சீனா, ஓமன், இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியவையும் கலந்து கொண்டன.
- ஹார்முஸ் ஜலசந்தியானது உலகின் மிக முக்கியமான போக்குவரத்துப் பகுதியாக விளங்குகின்றது.
- இந்த ஜலசந்தியானது பாரசீக வளைகுடாவையும் ஓமன் வளைகுடாவையும் இணைக்கின்றது.
- இந்தியாவின் மூன்றில் இரண்டு பங்கு எண்ணெய் இறக்குமதியும், திரவ இயற்கை எரிவாயு (எல்.என்.ஜி) இறக்குமதியில் பாதியும் இந்த ஜலசந்தி வழியாக நடைபெறுகின்றது.




# பொருளாதாரச் செய்திகள்

## பூர்வோதயா

- உலகத் தரம் வாய்ந்த ஒரு எஃகு மையமாக பூர்வோதயாவைத் தொடங்க உள்ளதாக மத்திய எஃகு துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- இது கிழக்கு மாநிலங்களின் விரைவான வளர்ச்சித் திட்டத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "பூர்வோதயா" திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்த அமைச்சகமானது இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்புடன் (Confederation of India Industries - CII) இணைந்துச் செயலாற்ற உள்ளது.
- மேற்கு வங்கம், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் வடக்குப் பகுதி ஆகிய 5 கிழக்கு மாநிலங்கள் நிலக்கரி, பாக்சைட் மற்றும் டோலமைட்

இருப்புக்களை அதிகமாகக் கொண்டுள்ளன.

- இப்பகுதியில் ஹால்டியா, பாரதீப், கொல்கத்தா மற்றும் விசாகப்பட்டிணம் போன்ற முக்கியத் துறைமுகங்கள் உள்ளன.
- இப்பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள 12 முக்கிய எஃகு மண்டலங்களாவன:
    - கலிங்கா நகர் - ஒடிசா
    - அங்குல் - ஒடிசா
    - ரூர்கேலா - ஒடிசா
    - ஜார்சுகுடா - ஒடிசா
    - நாகர்னர் - சத்தீஸ்கர்
    - பிலாய் - சத்தீஸ்கர்
    - ராய்ப்பூர் - சத்தீஸ்கர்
    - ஜாம்ஷெட்பூர் - ஜார்க்கண்ட்
    - பொகாரோ - ஜார்க்கண்ட்
    - துர்காபூர்- மேற்கு வங்கம்
    - கொல்கத்தா - மேற்கு வங்கம்
    - விசாகப்பட்டினம் - ஆந்திரா.

### நிலக்கரி சுரங்கச் சட்டங்களைத் திருத்துவதற்கான அவசரச் சட்டம்

- 1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் தாதுக்கள் மேம்பாடு & ஒழுங்குமுறைச் சட்டம் மற்றும் 2015 ஆம் ஆண்டு நிலக்கரி சுரங்கங்கள் (சிறப்பு பிரிவுகள்) சட்டம் ஆகியவற்றைத் திருத்துவதற்கான அவசரச் சட்டத்தை இந்திய அரசு அறிவித்துள்ளது.
- இது எளிதில் தொழில் தொடங்குதல் மற்றும் நிலக்கரிச் சுரங்கங்களின் ஏலத்தை எளிதாக்குதல் போன்றவற்றை உறுதிப்படுத்த உள்ளது.
- இது அன்னிய நேரடி முதலீட்டை ஊக்குவிக்கும்.
- இந்தியா உலகின் நான்காவது மிகப்பெரிய நிலக்கரி இருப்பினைக் கொண்டு இருந்த போதிலும், கடந்த ஆண்டு 235 மில்லியன் டன்கள் நிலக்கரியை இறக்குமதி செய்தது.
- எனவே உலகில் நிலக்கரியை அதிகமாக இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- நிலக்கரி உற்பத்தியை 2024 ஆம் ஆண்டுக்குள் 1 பில்லியன் டன்னாக அதிகரிக்க இந்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- 2019-20 ஆம் நிதியாண்டில், இறக்குமதி இலக்கானது 660 மில்லியன் டன்களாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### இந்திய இணையவழிக் குற்றங்கள் ஒருங்கிணைப்பு மையம் (I4C)

- மத்திய உள்துறை அமைச்சகமானது இந்திய இணையவழிக் குற்றங்கள் ஒருங்கிணைப்பு மையம் (Indian Cyber Crime Coordination Centre - I4C) மற்றும் தேசிய இணையவழிக் குற்றங்கள் என்ற இணைய தளம் ஆகியவற்றினைத் தொடங்கி வைத்துள்ளது.

- இந்த I4C மையமானது புது தில்லியில் அமைந்துள்ளது.
- இது மத்திய உள்துறை அமைச்சகத்தினால் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இணையம் மற்றும் தகவல் பாதுகாப்புப் பிரிவின் கீழ் அமைக்கப்பட உள்ளது.
- தேசிய இணையவழிக் குற்றங்கள் அறிக்கையிடல் வலைதளமானது இணையவழிக் குற்றங்கள் தொடர்பாக குடிமக்கள் நிகழ்நேரத்தில் அல்லது ஆன்லைனில் புகாரளிக்க உதவுகின்றது.
- மத்திய அரசானது I4C மட்டுமல்லாது தேசியத் தகவல் மையம் – கணினி சார்ந்த அவசரக் கால பதிலெதிர்ப்புக் குழு (National Informatics Centre-Computer Emergency Response Team - NIC-CERT) ஆகியவற்றையும் தொடங்கியுள்ளது.

## கொரோனா வைரஸ்

- புதிய வகை வைரஸால் ஏற்படும் நிமோனியா காரணமாக நாட்டில் ஏற்பட்ட முதலாவது மரணத்தை சீனா அறிவித்துள்ளது.
- சீன விஞ்ஞானிகள் வைரஸின் புதிய திரிபான கொரோனா வைரஸ் தான் இந்த இறப்பிற்குக் காரணம் என்பதனைக் கண்டுபிடித்துள்ளனர்.
- 2002-03 ஆம் ஆண்டில் கொரோனா வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த சார்ஸ் வைரஸ் சீனாவில் தோன்றியது.
- கொரோனா வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற கொடிய வைரஸானது மெர்ஸ் - மத்தியக் கிழக்கு சுவாச அறிகுறி நோய் (Middle East Respiratory Syndrome - MERS) ஆகும்.
- 2019 ஆம் ஆண்டு நிலவரப்படி இந்த வைரஸுக்கு குறிப்பிட்ட தடுப்பூசி எதுவும் கண்டுபிடிக்கப் படவில்லை.

# முக்கிய தினங்கள்


## தேசிய இளைஞர் தினம் - ஜனவரி 12

- இந்திய அரசாங்கமானது சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாளான ஜனவரி 12 ஆம் தேதியை 1984 ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் தினமாக அறிவித்துள்ளது.
- இந்நாளின் நோக்கமானது சிறந்த ஆன்மீகத் தலைவரை கௌரவிப்பதும் நாட்டில் உள்ள இளைஞர்களை ஊக்குவிப்பதும் ஆகும்.
- இந்நாளானது 'தேசக் கட்டமைப்பிற்காக இளைஞர் சக்தியை ஒருங்கிணைப்பது" என்றக் கருப்பொருளுடன் கொண்டாடப்பட்டது.
- தேசிய இளைஞர் விழாவானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் தேதி முதல் 2020 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் தேதி வரை உத்தரப் பிரதேசத்தின் லக்னோவில் நடைபெற்றது.
- 23வது தேசிய இளைஞர் விழாவை மத்திய இளைஞர் விவகாரத் துறை அமைச்சகம் மற்றும் உத்தரப் பிரதேச மாநில அரசு ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.
- தேசிய இளைஞர் திருவிழாவின் கருப்பொருளானது "ஆரோக்கியமான இளைஞர்கள் ஆரோக்கியமான இந்தியா" என்பதாகும்.

### *விவேகானந்தர் பற்றி*

- சுவாமி விவேகானந்தர் என்று அழைக்கப்படும் நரேந்திர நாத் தத்தா 1863 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் தேதியன்று பிறந்தார்.
- அவர் 1893 ஆம் ஆண்டில் சிகாகோவில் நடைபெற்ற முதலாவது மதம் சார்ந்த மாநாட்டில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காகப் பங்கேற்றார்.

- அவர் கல்கத்தாவுக்கு அருகிலுள்ள பேலூரில் 1897 ஆம் ஆண்டில் ராமகிருஷ்ணா மடாலயத்தை நிறுவியுள்ளார்.
- விவேகானந்தரை "நவீன இந்தியாவின் கட்டமைப்பாளர்" என்று நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் அழைத்தார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★